மாற்றிக் கொடுத்ததால் 71 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பாதிக்கப்பட்டனர் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். செளந்தரராஜன்: (அ) மாணவர்கள் யாரும் பாதிக்கப்படவில்லை.

(இ) ஏப்ரல் 24-ம் தேதி நடக்கவிருந்த தேர்வை நடத்தாமல் ஒத்திவைத்து, அந்த ஆண்டு ஆங்கிலப் பாடத்தில் வினாக்கள் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்று 28-4-78-அன்று தேர்வு நடத்தி வைக்கப் பெற்றுள்ளது.

Export of Handloom Cloth.

* 80 *Q.*—THIRU K. RAMAMOORTHI: Will the Hon. the Minister for Handlooms be pleased to state—

(*a*) whether the Government have any proposal to establish an Agency which would help the export of handloom cloth; and

(*b*) if so, when this will be established?

கைத்தறித் துணி ஏற்றுமதி.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு உதவுகின்ற அமைப்பு ஒன்றினை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போழுது நிறுவப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன்: (அ) வினாவில் குறிப்பிட்டுள்ள அமைப்பு நிறுவும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. இராமமூர்த்தி: கைத்தறித் துணி ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், பெருமளவுக்குத் தமிழகம்தான் முன்னணியில் நிற்கிறது. என்றாலும்கூட இந்த ஏற்றுமதி குறித்த முழு அதிகாரம், முழுப் பயன் ஆகியவைகளை மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், அகில இந்திய அடிப்படையில் செல்வாக்கைப் பெற்று, முன்னணியில் அனுபவித்து வருகிறார்கள். அதன் விளைவாக மில்களில் தயாரிக்கப்படும் துணிகள் எல்லாம் கைத்தறித் துணிகள்

1978 செப்டம்பர் 12]

என்கிற பெயரால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதன் காரணமாக தமிழகத்தின் கைத்தறித் தொழில் வெகுவாகப் பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 'எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சில்' என்கிற அகில இந்திய அமைப்புகூட சென்னையிலே இயங்கினாலும், அந்த அமைப்பை ஆட்டிப் படைப்பவர்கள் தமிழகத்திலே மிகக் குறைவாக இருக்கிறார்கள் என்ற நிலையில், குஜராத் மற்றும் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால், தமிழகம் பாதிக்கப்படுகிறது. இந்த நிலைமையைப் போக்க தமிழகத்திற்கு என்று தனியாக ஒரு ஏற்றுமதி கவுன்சில் அமைக்க அரசு முன் வருமா என்றும், அப்படிச் செய்வதன் மூலம் கைத்தறித் தொழிலுக்கான பாதுகாப்புத் தருவதை விரைவுபடுத்துமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மத்திய கைத்தறிக் கமிஷனரைத் தலைவராகக் கொண்டு இயங்கி வரும் கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்திக் குழு, கைத்தறித் துணி ஏற்றுமதிக்குப் பெருமளவு உதவி வருகிறது. இந்நிறுவனத்தின் குழுவில் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர் உறுப்பினராக உள்ளார். இக்குழு கைத்தறி இலாக்காவினுடன் ஒருங்கிணைந்து இயங்கி வருகிறது. ஆகவே மாநில அளவில் கைத்தறி ஏற்றுமதிக்கு உதவ ஒரு அமைப்பு தனியாக நிறுவ வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையும் பரிசீலிக்கப்படும்.

திரு. க. இராமமூர்த்தி: அமைச்சர் அவர்கள் என்னுடைய யோசனையைப் பரிசீலிப்பதாகச் சொன்னதற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஹாண்ட்லூம் எக்ஸ்போர்ட் பிரமோஷன் கவுன்சிலின் ஊழியர்களின் தலைவனாக இருந்தவன் என்ற முறையில் எனக்கு நிலைமைகள் நன்றாகத் தெரியும். கைத்தறித் துணி ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், வடக்கே இருக்கிற வியாபாரிகளும், மில் முதலாளிகளும்தான் அதனுடைய முழுப்பயனை அனுபவிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இங்கே இயங்குகிற மற்ற அமைப்புகள் மூலமாகவோ மற்றும் கைத்தறியைக் கூட்டுறவுத் துறையில் தயாரிப்பவர்களோ இதன் பலனைப் பெறவில்லை. கைத்தறியை மொத்த வியாபாரமாகக் கொண்டு தயாரிப்பவர்களும் அதில் ஈடுபட்டுள்ள பெரும் முதலாளிகளும்தான் இதன் பலனை முழுமையாகப் பெறுகிறார்கள். ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களும் மிகக் குறைவு என்ற நிலையில், இதனுடைய அவசியம் கருதி, மாநில அளவில் ஒரு அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் தமிழகத்

[1978 செப்டம்பர் 12

தினுடைய கைத்தறித் தொழிலாளர்களுக்கும், கூட்டுறவுத் துறையில் ஈடுபட்டுள்ள கைத்தறித் தொழிலாளர்களுக்கும் உதவியாக இருக்கும் அளவில் அரசு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மத்திய ஏற்றுமதி அபிவிருத்திக் குழுதான் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டு இருந்தாலும் கூட, கோ-ஆப்டெக்ஸ் மூலம், ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு கைத்தறித் துணி ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதை இன்னும் விரிவுபடுத்தி, கைத்தறியில் உற்பத்தியாகும் துணியைபல்வேறு அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யும் திட்டம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காக மறைந்த மூதறிஞர் ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டதைப் போல், ஒரு சில குறிப்பிட்ட ரகங்களை கைத்தறித் துறையின் உற்பத்திக்கு என்று ஒதுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: ஏற்கனவே கைத்தறிக்கும், விசைத் தறிக்கும் ஏற்பட்டுள்ள போட்டி மனப்பான்மை காரணமாக, மத்திய அரசு சில ரகங்களைக் கைத்தறித் துறைக்கு ஒதுக்கியிருக்கிறது. அந்த ரகங்கள் விசைத் தறியால் உற்பத்தி செய்யப்படக்கூடாது என்று தடை இருந்தாலும் சில விசைத்தறியாளர்கள் இதை உற்பத்தி செய்து வருவதாக அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கிற காரணத்தால், இப்போது கைத்தறிக்கு ஒதுக்கப்பட்டு ஆனால் விசைத்தறியால் தயாரிக்கப்பட்ட ரகங்களை அதிகமாகத் தடுக்க முடியாத நிலையில் இவ்வரசு இருக்கிறது. எனவே இந்த அதிகாரத்தை மாநில அரசுக்கே கொடுக்க வேண்டும் என்று இம்மாநிலக் கைத்தறித் துறை மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

(பிற்பகல் 4-30)

திரு. பி. மாணிக்கம்: இந்தியாவிலேயே அதிக கைத்தறி ரகம் உற்பத்தி செய்வது தமிழகம்தான். இந்த முறையிலே நமக்கு வெளிநாட்டு விற்பனைக்கு வாய்ப்புகள் என்ன இருக்கின்றன என்பதைக் கண்டறிய நம் மாநில அரசு ஒரு தூது கோஷ்டியை அனுப்ப முயற்சிக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: இந்த முயற்சியின் அடிப்படையில்தான் ரஷ்யாவில் நடைபெற்ற சிறு தொழில் வர்த்தகக் கண்காட்சியில், கைத்தறி ஒன்று அங்கு அனுப்பப்பட்டு, அந்தத் தறியிலேயே உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை அங்கேயே கண்காட்சியில் வைத்துக் காட்டப்பட்டது. இதுபோல பல்வேறு திட்டங்களை இந்த அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தற்போது கைத்தறி வளர்ச்சிக்காக நம்முடைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டுகிறேன். தமிழகத்திலே கண்டறியப்பட்ட அம்பர் சர்க்காவின் நூலுக்கும் துணிக்கும் இந்த அரசு எந்த அளவுக்கு ஆதரவு தருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: மூலக் கேள்விக்கும் இந்த துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லை என்றாலும், மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அந்த அம்பர் சர்க்கா நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு, அதில் நூல் உற்பத்தி, துணி உற்பத்தி செய்கின்ற தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தமிழகத்தினுடைய கைத்தறித் துணிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வண்ணம், மத்திய அரசு விசைத் தறிக்குச் சலுகைகள் கொடுத்து வளர்த்துக் கொண்டிருப்பது தெரியுமா? அதனால் கைத்தறி வளர்ச்சி பாதிக்கப்படும். அது பற்றி அரசுக்குத் தெரியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, அது சரியில்லை என்ற அளவில், மத்திய அரசுக்கு நாம் கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டிருக்கிறோம் மேற்கொண்டு விசைத் தறிகள் காரணமாக கைத்தறி பாதிக்கப் படாமலிருக்க இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஏற்கெனவே ஒத்தி வைக்கப் பட்ட வினக்கள் 52, 53 இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றன.